Process Safety Beacon

http://www.aiche.org/CCPS/Publications/Beacon/index.aspx

**உற்பத்தியாளர்களுக்கான குறிப்புகள்**

வழங்குபவர்கள்
CCPS
Supporters

# தொழிற்சாலை பாதுகாப்பு

செப்டம்பர் 2008



2001 ம் ஆண்டு, தீவிரவாதிகள் அமெரிக்காவைத் தாக்கிய இந்த செப்டம்பர் மாதம், நமக்குப் பல நினைவுகளை ஏற்படுத்துகிறது. உலகம் முழுவதும் பல இடங்களில் இது போன்ற பல தாக்குதல்கள் நியூயார்க் மற்றும் வாஷிங்டன் நகரங்கள் தாக்கப் பட்டதற்கு முன்னும் பின்னும் (உதாரணமாக டோக்யோ சப்வே; லண்டன்; மேட்ரிட்; பாலி, இந்தோனேஷியா; அஹமதாபாத், இந்தியா; ரஷ்யாவில் பல தாக்குதல்கள், மத்திய கிழக்கு நாடுகளில் பல இடங்களில் தாக்குதல்கள்) பல சமயங்களில் ஏற்பட்டுள்ளன. இது போன்ற தீவிரவாதத்தாலும், நாச வேலைகளாலும் பாதிக்கப் படாத நாடுகளே இல்லை என்றுகூடச் சொல்லலாம். பலவிதமான செயல்பாடுகள் நடைபெறும் பல தொழிற்சாலைகளில் கையாளப்படும் பொருட்களிலிருந்தும், கையாளப்படும் விதங்களிலிருந்தும் நாம் கொழிற்சாலையையும், நம்மையும், நமது உடன் பணிபுரியும் பணியாளர்களையும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும் மிகக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். நீங்கள் ஒரு இரசாயனப் பொருள் தொழிற்சாலையிலோ அல்லது அதைப் பயன்படுத்தும் தொழிற்சாலையிலோ பணி புரிந்தால், உங்கள் தொழிற்சாலையில் எந்தெந்த விதங்களில் ஆபத்துக்கள் ஏற்படலாம் என்பதை நன்கு புரிந்து கொள்ள முடியும். நீங்கள் பணி புரியும் போதே, ஏற்படக்கூடிய ஆபத்துக்களை நன்கு புரிந்து கொண்டு நிர்வாகத்திடம் முறையிட்டு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் படி செய்ய வேண்டும்.

## நீங்கள் என்ன செய்யலாம்?

நீங்கள் தொழிற்சாலையில் தினசரி வேலை செய்யும் போதே, என்னென்ன ஆபத்துக்கள் ஏற்படலாம் என்று பார்க்கும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். எனவே அவற்றை கவனமாகப் பார்த்து உடனடியாக மேலிடத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். இங்கே சில உதாரணங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. உங்கள் நிர்வாகத்தின் உதவியுடன் இன்னும் பலப்பல நிகழ்வுகளையும் ஆராய முடியும்.

- பாதுகாப்பு விளக்குகள் சரியாக வேலை செய்கின்றனவா என்றும் போதுமான அளவு உள்ளனவா என்றும் சரிபார்த்தல்
- தொழிற்சாலையின் வேலியில் உள்ள கதவுகளுக்கு சரியான தாழ்ப்பாள்கள் உள்ளதா என்று சரிபார்த்தல்
- கதவுகள் கெட்டியாக இல்லாதிருந்தாலும், கீழ்ப்புறத்தில் பெரிய இடைவெளியுடன் இருந்தாலும், உடனே சரிபார்த்தல்
- வேலிகளில் இடைவெளிகள் இருக்கிறதா என்று பார்த்தல், வேலிகளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்று சரிபார்த்தல், மிகவும் கீழிறங்கி உள்ளதா என்று பார்த்தல் மற்றும் வேலியின் கீழே நிலம் அரிக்கப் பட்டுள்ளதா என்பது போன்ற விவரங்களை சரிபார்த்தல்
- வேலிக்கு வெளிப்புறம், வேலியைத் தாண்டி குதிப்பதற்கு உதவும் வண்ணம் உள்ள பொருட்கள் ஏதேனும் உள்ளதா என்று பார்த்தல்
- சரியாக பொருத்தப்படாத செயின்கள் மற்றும் பூட்டுகளை சரிசெய்தல்
- தொழிற்சாலைக்கு வெளியே கதவுகள், ஜன்னல்கள் போன்றவை எளிதில் திறக்கும்படி உள்ளதா அல்லது திறந்து உள்ளதா என்று பார்த்தல்
- முழுவதும் சார்த்திய பின்பும் சரியாக மூடிக் கொள்ளாத வெளிப்புறக் கதவுகளைச் சரி செய்தல்

இவை மட்டுமின்றி உமது தொழிற்சாலையில் உள்ள பாதுகாப்பு சார்ந்த அனைத்து செயல்பாடுகளையும் அறிந்து கொண்டு அவற்றைப் பின்பற்றி நடக்கவும் - உதாரணத்திற்கு

- எப்போதும் உங்கள் அடையாள அட்டையை அணியவும். அடையாள அட்டை அணியாமல் எவரையேனும் பார்த்தால் உடனே மேலதிகாரிகளுக்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் தெரிவிக்கவும்.
- உங்கள் தொழிற்சாலைக்கான அடையாள அட்டையையும் நுழைவு அட்டையையும் வேறு எவருக்கும் கொடுக்க வேண்டாம்.



செடிகளும் மரங்களும் புதர்போல வளர்ந்திருக்கும் வேலிப் பகுதி



வேலிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கார் மேல் எளிதாக ஏறி வேலியைத் தாண்ட முடியும்



வேலியின் மீது அப்படியே பூட்டப்பட்டுள்ள ஒரு பூட்டு-வேலியின் கட்டைகளைச் சுற்றி ஒரு சங்கிலியைப் போட்டு இணைத்து பூட்டப்படுவது இதை விட உறுதியானது.

**தொழிற்சாலை பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு**

AIChE © 2008. எல்லா உரிமைகளும் பெற்றுள்ளது. வியாபார நோக்கற்றும், பிறருக்கு தெரியப் படுத்துவதற்காகவும் இதை மறுவெளியீடு செய்வது ஊக்குவிக்கப் படுகிறது. ஆனால் CCPS தவிர பிறருக்கு, மறுவிற்பனை (resale)க்காக வெளியிடுவதற்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது. தொடர்பு கொள்ளவும் ccps_beacon@aiche.org or 212-591-7319.

இந்த பீகான், ஆப்பிரிக்கான்ஸ், அரபிய, சீன, டானிஷ், டச், ஆங்கிலம், ஃப்ரெஞ்சு, ஜெர்மன், குஜராத்தி, ஹீப்ரூ, ஹிந்தி, ஹங்கேரிய, இந்தோனேஷிய, இத்தாலிய, ஜப்பானிய, கொரிய, மலாய், மராத்தி, பெர்ஷிய, போலந்து, போர்ச்சுகீசிய, ரஷ்ய, ஸ்பானிஷ், ஸ்வீடிஷ் மற்றும் தாய்லாந்து மொழிகளில் கிடைக்கும்.

Translated by Cholamandalam MS Risk Services, India